**மத்திய அதிவேகப் பாதைச் செயற்திட்டம் - கட்டம் IV - 2018**

---

மத்திய அதிவேகப் பாதைச் செயற்திட்டம் கட்டம் IV இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

முன்னால் நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சாகவிருந்த தற்போதைய வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. பொது மக்களிற்கு புதிய பொருளாதார மார்க்கங்களை உருவாக்குவதற்காக 2007 – 2017 வீதி பிரதான திட்டத்தின் பிரகாரம் வீதி வலையமைப்புக்களை விருத்திசெய்தல் மற்றும் அதற்காக ரூபா 161.6 பில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் மத்திய அதிவேகப்பாதையின் கட்டம் IV இன் கீழான குருநாகல் தொடக்கம் தம்புள்ள வரையான அதிவேகப்பாதையின் 58.7 கிலோமீற்றரின் பகுதியினை நிர்மானிக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தமை போன்றன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும்.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து

செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி-யொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டிலும் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து செயற்திட்ட கண்காணிப்பு பிரிவிற்கு மாற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதியினை உறுதி செய்து கணக்குகளிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் குறை மதிப்பீடு. | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயர் முகாமைத்துவம் சொத்துக்களின் பாவனைக்கு ஒரு வாடகையை தீர்மானிக்க உடன்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டமானது இன்னும் எவ்வித பின்னூட்டலையும் பெற்றிறாததுடன் இது 2019 இன் நிதிக்கூற்றுக்களில் வழங்கப்படும். | செயற்திட்டத்தின் உண்மைக்கிரயம் கணக்கிடப்படல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டமானது முழு மத்திய அதிவேகப்பாதையின் சாத்தியவள கற்கைகளுடன் தொடர்புபட்டு ஏற்பட்ட மொத்தமாக ரூபா 2,193 மில்லியன் கிரயத்தினை தனித்தனியாக பிரித்து செயற்திட்டத்தின் பகுதி - IV ற்கான உரிய பங்கினை கணக்கிற்கு கொண்டுவரவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சொத்துக்கள் பொறுப்புக்களின் குறை மதிப்பீடு. | சரியான நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்டத்திற்காக ஏற்பட்ட உண்மைக்கிரயம் கணக்கிடப்படல் வேண்டும். |

## 2.2 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 2016 மார்ச் 31 ஆம் திகதிய இல.5/2016 பொது நிதிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமானங்கள். | செயற்திட்டத்திற்கு சொந்தமான சொத்தின் ஒரு நிலஅளவைச்சபை நடாத்தப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒரு அறிக்கையினை சமர்ப்பித்திருக்கவில்லை. | சொத்துக்களின் தவறான பயன்பாடு. | உடன்பட்டனர். | சுற்றறிக்கை நிபந்தனைகள் பின்பற்றப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2016 மார்ச் 24 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இல 1/2016. | செயற்திட்டத்தை அமுல்படுத்தும் நேரத்தில் கடன் வழங்கும் முகவரிடமிருந்து பெற்றுக்கொண்ட நிதிகளுக்காக ஒரு உடன்படிக்கையோ அல்லது ஆகக்குறைந்தது ஒரு உத்தரவாதமோ அல்லது நிச்சயதன்மையோ இருக்கவேண்டி இருப்பினும் செயற்திட்டமானது அவ்வாறான ஒரு செயன்முறையினை பின்பற்றியிருக்கவில்லை. அதன் பெறுபேறாக, செயற்திட்டமானது 3 வருடங்களாக இன்னும் ஒரு கடன் வழங்கும் முகவர் இல்லாமல் செயற்படுகின்றது. | நிர்மானத்தை ஆரம்பிக்காமல் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் பராமரிப்பிற்கான தேவையற்ற கிரயங்கள் ஏற்படலாம். | ஆரம்பத்தில் வரையறுத்த சீனா ஜிசோபா பொது சர்வதேச பொறியியலாளர் கம்பனி அடயாளப்படுத்தப்பட்டு இருந்தது. ஆனாலும் ஒப்பந்தமானது 2016 இல் தவிர்க்க முடியாத காரணங்களினால் செயற்படுத்தப்படாமல் இருந்தது. | சுற்றறிக்கை நிபந்தனைகள் பின்பற்றப்பட வேணடியதுடன் நிதி ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். |

## 3. பௌதீக முன்னேற்றம்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| செயற்திட்டமானது குருநாகல் தொடக்கம் தம்புள்ள வரையான மத்திய அதிவேகப்பாதையின் 58.70 கிலோமீற்றர்களின் நிர்மானத்தினை கொண்டிருந்தது. செயற்திட்ட முகாமைத்துவ பிரிவானது 2016 இல் நிறுவப்பட்டு 2018 திசெம்பர் 31 வரை செயற்திட்ட முகாமைத்தவ பிரிவின் செயற்பாடுகளுக்காக ரூபா 182.30 மில்லியன் தொகையான செலவுகள் ஏற்பட்டு இருப்பினும், அதிவேகப்பாதையின் சிவில் நிர்மான வேலைகள் 2019 ஒக்டோபர் 30 வரை கூட ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சிவில் வேலைகளின் ஆரம்பிப்பில் காணப்பட்ட தாமதங்கள் காரணமாக கிரயங்கள் அதிகரிப்பதற்கான சாத்தியம். | செயற்திட்டமானது 2016 ஜூலை 01 இல் அதன் நிதி நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்ததுடன் மாதாந்த சராசரி கிரயம் ரூபா 6.11 மில்லியனாக காணப்பட்டது (30 மாதங்களிற்கு). அலுவலகர்கள் சிவில் வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் காணி சுவீகரிப்பு மற்றும் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும். | கிரய அதிகரிப்பு மற்றும் ஒப்பந்தத்தின் கால நீடிப்பு என்பவற்றை தவிர்ப்பதற்கான கால இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முறையான கண்கானிப்பு நடைமுறை பின்பற்றப்படுதல் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | மொத்தமாக ரூபா 3.5 மில்லியன் ஊக்குவிப்பு கொடுப்பனவு வரிசை அமைச்சு, நில அளவை அதிபதி திணைக்களம் மற்றும் மதிப்பீட்டு திணைக்களம் என்பவற்றின் ஊழியர்களிற்கு செயன்முறைகளை துரிதப்படுத்துவதற்காக செலுத்தப்பட்டிருப்பினும், வீதி நிர்மான வேலைகளுக்கான காணிகளின் சுவீகரிப்பு செயன்முறை 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மந்தமான செயலாற்றலை காட்டியிருந்தது. | கொடுப்பனவுகளின் தீர்ப்பனவுகளில் காணப்பட்ட தாமதம் காரணமாக இழப்பீடகள் மீதான வட்டிக் கிரயங்கள் அதிகரிப்பதற்கான சாத்தியம். | பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இல.எச்ஏபி-2/15/சீஓஆர்டிஜ/15/1552 இன் பிரகாரம் காணி சுவீகர்ப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக அமைச்சு, நில அளவை திணைக்களம் மற்றும் விலை மதிப்பு திணைக்களம் போன்றவற்றின் உத்தியோகத்தர்களிற்காக செலுத்தப்பட்ட ஊக்குவிப்பு காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவின் பிரகாரம் பிரிக்கப்பட | காணி சுவீகரிப்பு செயற்முறையை விரைபுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | முடியும். செயற்திட்டமானது இன்னும் பிரிவு 2, 38(அ) மற்றும் 5 இற்கு பொருத்தமான ஊக்குவிப்புக்களுக்கு மாத்திரமே செலுத்தியிருந்தது. | |
| (ஆ) | தம்புள்ள பகுதிகளில் காணப்பட்ட அதிகமான காணி மதஸ்தலம், தேவாலயம் அல்லது ஆக்கிரமிப்புக்களிற்கு சொந்தமாக இருந்தது இருப்பினும் 2014 மே 30 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி இல.1864/54 இல் இருந்து வேறான ஒரு மேலதிக நிவாரணம் மேற்கூறப்பட்ட காணிகளின் உரிமையாளர்களினால் வேண்டுகோள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களுக்கான இழப்பீடுகளை கொடுப்பதற்கான வழி 2019 செப்டம்பர் வரை கூட தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவுகளின் தீர்ப்பனவுகளில் காணப்பட்ட தாமதம் காரணமாக இழப்பீடுகள் மீதான வட்டிக் கிரயங்கள் அதிகரிப்பதற்கான சாத்தியம். | கலேவல மற்றும் தம்புள்ள பகுதிகளின் அனேகமான காணி உரிமையாளர்கள் இழப்பீட்டிற்கு தகுதியாக இருப்பதுடன் கொடுப்பனவுகள் இறுதியாக்கப்பட்டிருக்கவில்லை ஏனெனில் அமைச்சரவை பத்திரத்தினை அமுல்படுத்தலின் ஊடான கொடுப்பனவுகள் தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றுக்கொண்டிருந்தமை ஆகும். | காணி சுவீகரிப்பு செயற்முறையை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 புறநடையான நடவடிக்கைகள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| பொலன்னறுவை மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தினால் செலவிடப்பட்டிருந்த மொத்தமாக ரூபா 6.5 மில்லியன் செயற்திட்டத்தின் குறிக்கோல்களை அடைவதுடன் நேரடியாக தொடர்புபட்டு காணப்படவில்லை. | நிதிகளை தேவையற்ற விதத்தில் பயன்படுத்துவதற்கான சாத்தியம். | பொலன்னறுவை செயற்திட்டத்தின் அவசர தேவை காரணமாக நிதிகள் பயன்படுத்தப்பட்டன. மொத்த தொகையும் 2019 ஆம் ஆண்டு முடிவிற்குள் மீளப்பெறப்பட்டிருக்கும். | செயற்திட்டத்தின் புறநடயான நடவடிக்கைகளிற்கு செய்யப்பட்ட கொடுப்பனவுகளை மீளப்பெற நடவடிக்கை எடுககப்படல் வேண்டும். |

### 3.4 சச்சரவுத்தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| செயற்திட்டமானது ஐ.அ டொலர் 5 மில்லியனை மிஞ்சும் உள்நாட்டு நிதிகளில் கீழ் தொடங்கப்பட்டிருந்தால், வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குமிடையே ஒரு உடன்படிக்கை ஏற்படுத்தப்படல் வேண்டும். இருப்பினும், அவ்வாறான ஒரு உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை அதனால் இது ஒரு கேள்விக்குறியாக இருக்கின்றது செயற்திட்ட உத்தியோகத்தர்களிற்கான சம்பளங்கள் மற்றும் ஏனைய நன்மைகள் வெளிநாட்டு நிதியளிப்பு செயற்திட்டத்தின் கீழே பொருத்தமானதாக இருக்கலாம். | செயற்திட்டத்தின் மொத்தக் கிரயம் அதிகரித்திருக்கலாம். | அதன் மீதான அமைச்சரவை அனுமதி பாரிய அளவிலான செயற்திட்டங்களிற்காக சலுகை நிதியளிப்பிற்காக பெறப்பட்டிருந்தது. இதனால் சீனாவின் எக்ஸிம் வங்கி கடன் வழங்க உடன்பட்டிருந்தது. | நிதி ஏற்பாடுகளிற்காக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்புடய விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) செயற்திட்டமானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட பதவியனிகளிற்கு மேலதிகமாக 03 முகாமைத்துவ உதவியாளர்களை வேலைக்கமர்த்தியிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 1,437,568 செலுத்தியுமிருந்தது. | மேலதிக உத்தியோகத்தர்கள் செயற்திட்டத்திற்கு மேலதிக கிரயத்தினை ஏற்படுத்தலாம். | உடன்பட்டனர். அலுவலக முகாமையாளர் மற்றும் நிர்வாக உதவியாளர்களிற்கான பதவியனிக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பினும் அவ்வெற்றிடங்கள் இன்னும் நிரப்பப்படவில்லை. எனவே அனைத்து நிர்வாக வேலைகளும் முகாமைத்துவ உதவியாளர்களினால் செய்யப்பட்டிருந்தது. | தேவையான ஊழியர்கள் அனுமதிக்கப்பட்ட வரையறைக்குள்ளேயே ஆட்சேர்க்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | மொத்தமாக ரூபா 708,550 முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் தேவையான அனுமதி பெறப்படாமல் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட மூன்று ஆலோசகர்களிற்காக செலுத்தப்பட்டிருந்ததுடன் செலுத்தப்பட்ட ஆலோசகர் கட்டணம் மீளாய்வாண்டிற்கான சம்பளம் மற்றும் கூலிகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | திறனற்ற ஊழியர்களின் தலையீட்டினால் நட்டங்களிற்கான சாத்தியம். | முன்று ஆலோசகர்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயர் முகாமைத்துவத்தினால் மத்திய அதிவேகப்பாதை செயற்திட்டத்தின் பகுதி IV இற்காக நியமிக்கப்பட்டள்ளனர். அம் மூன்றில், இரண்டு ஆலோசகர்கள் வேலைக்கு அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் 2018 மே மற்றும் ஜுனிலிருந்து ஏற்கனவே நீக்கப்பட்டுமிருந்தனர் மேலும் மிகுதி பதவி ஆலோசகரிற்காக இருந்தது (தொழிநுட்ப சேவை). | தொடர்புடைய அனுமதி பெறப்படல் வேண்டும். |